<u>மாங்காடு நகராட்சி</u>
<u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>

**2023** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெள்ளிக்கிழமை **10.11.2023**ம் தேதி காலை **10.00** மணிக்கு மாங்காடு நகராட்சி நகரமன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக் கூட்டப்பொருள் நடவடிக்கை விவரம்.

---

**குறள்:** இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் செப்டம்பர் **2023** மற்றும் அக்டோபர் **2023** மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான **2023** மற்றும் அக்டோபர் **2023** மாதங்களுக்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

மாங்காடு நகராட்சியில் பொது நிதி **2023–2024**ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கெள்ள **04.10.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு ஒப்பு நோக்கு பட்டியல் ஒப்புதல் வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | சாந்தி நகர் **1** வது தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 600000 | திருவாளர். தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட ரூ. **0.12%** குறைவு |
| | | | திருவாளர். அமீயமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட ரூ. **0.26%** அதிகம் |
| 2 | சாந்தி நகர் 2வது தெரு 2வது குறுக்கு தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 910000 | திருவாளர். தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட ரூ. **0.13%** குறைவு |
| | | | திருவாளர். அமீயமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட ரூ. **0.26%** அதிகம் |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 3 | சிவந்தி நகர் மெயின்ரோடு மழைநீர் வடிகால் அமைத்தல் | 930000 | திருவாளர். அமீயமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட ரூ. 0.18% குறைவு |
| | | | திருவாளர். தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட ரூ. 0.43 அதிகம் |
| 4 | சிவந்தி நகர் குறுக்கு தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 680000 | திருவாளர். அமீயமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட ரூ. 0.18 குறைவு |
| | | | திருவாளர். தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட ரூ. 0.43 அதிகம் |

அலுவலக குறிப்பு :– 1 முதல் 4 வரை உள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கெள்ள27.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்பு நோக்கு பட்டியல் ஒப்புதல் வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | ஆயில் என்ஜின் வாடகைக்கு அமர்த்துதல் | 970000 | திருவாளர். எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.06% குறைவு |
| | | | திரு. பி. சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 0.15% அதிகம் |
| 2 | ஜேசிபி இயந்திரம் வாடகைக்கு அமர்த்துதல் | 980000 | திருவாளர். எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.06% குறைவு |
| | | | திரு. பி. சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 0.15% அதிகம் |
| 3 | மணல் மூட்டை மற்றும் சவுக்க கொம்புகள் சப்ளை செய்தல் | 5,00,000 | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.45% குறைவு |
| | | | திரு.பி.சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 0.89% அதிகம் |

அலுவலக குறிப்பு :– 1 முதல் 3 வரை உள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.6**

மாங்காடு நகராட்சியில் எதிர்வரும் தென்மேற்கு பருவமழையினால் ஏற்படும் விளைவுகளை தடுத்திட ஏதுவாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.103833/2021/மா.தி.3 நாள்.14.06.2023 மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்டம் ந.க.எண்.12321/2022/பே.மே. நாள்.20.06.2023 தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, கீழ்கண்ட பணிகளுக்கு 27.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல்10 வரை உள்ளசாலைகளை பழுதுநீக்கம் செய்தல் | 9,50,000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.17% குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 2.20% அதிகம் |
| 2 | வார்டு எண்.11 முதல்20 வரை உள்ள சாலைகளை பழுதுநீக்கம் செய்தல் | 9,70,000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.07% குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 2.23% அதிகம் |
| 3 | வார்டு எண்.21 முதல்27 வரை உள்ள சாலைகளை பழுதுநீக்கம் செய்தல் | 9,20,000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.18%குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 2.23%அதிகம் |

அலுவலக குறிப்பு :– 1 முதல் 3 வரை உள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.7**

2023–2024 மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகர்ப்புற துணை சுகாதார நிலையம் (Urban Health Sub Centre) அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1869/சூழரு<br>ஆ/ளுழளு/2015, நாள்.03.08.2023 மற்றும் தேசிய சுகாதார பணிகள் நிர்வாக அனுமதி அளித்து வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ரகுநாதபுரம் (அசோக் அவென்யூ) பகுதியில் நகர்ப்புற துணை சுகாதார நிலையம்(Urban Health Sub centre) கட்டிடம் கட்டும் பணி | 30,00,000/- |

அலுவலக குறிப்பு :– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.8**

**2022–2023** ஆம் ஆண்டிற்கு **6**வது மாநில நிதி குழுவின் கீழ் பணிகள் மேம்பாடு மான்ய திட்டத்தின் கீழ் மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பின்வரும் விவரப்படியான பள்ளிகளுக்கு கழிப்பறை வசதி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–**28** அவர்களின் கடிதம் ந.க.எண். **6002/2022**/எஎ**2**,நாள்.**25.10.2023**ன்படி நிர்வாக அனுமதி அளித்து வரப்பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சக்ரா நகர் பள்ளியில் மாணவர்கள் கழிப்பறை கட்டும் பணி | 1800000/- |
| 2 | சக்ரா நகர் பள்ளியில் மாணவிகள் கழிப்பறை கட்டும் பணி | 1680000/- |
| 3 | பட்டுர் பள்ளியில் கழிப்பாறை கட்டும் பணி | 800000/- |
| 4 | ரகுநாதபுரம் பள்ளியில் கழிப்பாறை கட்டும் பணி | 970000/- |

<u>அலுவலக குறிப்பு</u> **:–** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.9**

மாங்காடு நகராட்சியில் பொதுநிதிப்பணிகள் **2023–2024**ன் ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் **70** சாலைப்பணிகள் மற்றும் **2023–2024** பொது நிதியின் கீழ் **191** சாலைப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகள் நடைபெறும் சில பகுதிகளில் உள்ள சாலைகளின் தார் அமைக்க இயலாமல் குண்டும் குழியுமாக மழைநீர் தேங்கி இருப்பதால், பின்வரும் விவரப்படியான சாலைகளில் கப்பி தளம் அமைத்து பின் தார்தளம் அமைக்கவும் அதற்கான மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியலின் படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | அண்ணாதெரு ரங்கநாதன் நகர் கப்பி சாலை அமைத்தல் | 2,90,000 | திருவாளர். எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.24% குறைவு |
| | | | திரு. பி. சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 1.59% அதிகம் |
| 2 | ஆஞ்சநேயர் கோயில் தெரு 1,2,3வது தெருக்கள் கப்பிசாலை அமைத்தல் | 6,05,000 | திருமதி.ஆர். அமுதா | மதிப்பீடு தொகையை விட 0.01% குறைவு |
| | | | திருவாளர். அமீயமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.26% அதிகம் |
| 3 | வசந்தபுரம் மெயின்ரோடு கப்பி சாலை அமைத்தல் | 5,70,000 | திருமதி.ஆர். அமுதா | மதிப்பீடு தொகையை விட 0.01% குறைவு |
| | | | திருவாளர். அமீயமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.26% அதிகம் |
| 4 | சக்தி நகர் விரிவு காந்தி நகர் பிரதான சாலை குறுக்கு தெருக்கள் கப்பிசாலை அமைத்தல் | 2,70,000 | திருவாளர். ஓம்சக்தி எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.13% குறைவு |
| | | | திருவாளர். அமீயமு | மதிப்பீடு தொகையை விட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எண்டர்பிரைசஸ் | 0.03% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | அப்துல் சமத் நகர், ஒஏகே நகர் மற்று. எஸ்.கே எம் நகர் கப்பி சாலை அமைத்தல் | 3,60,000 | திருவாளர். தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.71% குறைவு |
| | | | திரு.எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 2.09% அதிகம் |
| 6 | தோப்பு தெரு கப்பி சாலை அமைத்தல் | 4,70,000 | திருவாளர். எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.24% குறைவு |
| | | | திரு. பி. சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 1.59% அதிகம் |
| 7 | நியு காமாட்சி நகர் முதல் தென்காலனி மற்றும் காமாட்சி நகர் கப்பி சாலை அமைத்தல் | 3,10,000 | திருவாளர். எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.24% குறைவு |
| | | | திரு. பி. சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 0.03% அதிகம் |
| 8 | அம்பாள் சிட்டி சீனிவாசா நகர் கப்பி சாலை அமைத்தல் | 2,00,000 | திருவாளர். எஸ்.வி.என். இன்ஃப்ரா | மதிப்பீடு தொகையை விட 0.24% குறைவு |
| | | | திருவாளர். அமீயமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.03% அதிகம் |
| 9 | ஆஞ்சநேயர் கோயில் தெரு பைராகுட்டை கப்பி சாலை அமைத்தல் | 3,60,000 | திருவாளர் கென்ஸ் டெக்னாலஜி | மதிப்பீடு தொகையை விட 0.24% குறைவு |
| | | | திரு.மோகன் காண்ட்ராக்டர் | மதிப்பீடு தொகையை விட 1.59% அதிகம் |

அலுவலக குறிப்பு :— 1 முதல் 9 வரையுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.10**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொசு ஒழிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்படும் மருந்துகளான Temepose, Pyrethrum மற்றும் Bactiside ஆகிய மருந்துகள் 2023—2024ம் ஆண்டிற்கு தேவைப்படுவதாலும், தற்போது மழைக்காலம் என்பதாலும் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகமாக உள்ளதால் தகுதி பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்திடவும் அதற்கான செலவினத் தொகை ரூ.8,00,000/—ஐ பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.11**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பணியாளர்கள் மற்றும் பொது பிரிவு பணியாளர்களுக்கு 2023—2024ஆம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது. எனவே அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்திடவும் அதற்கான செலவினத்தொகை ரூ.1,00,000/—ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.12**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் தூய்மை இந்தியா திட்டம் (SBM.2.0) செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஒரு பகுதியாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி (IEC) நடத்தப்பட்டு வருகிறது. குப்பைகளை தரம் பிரித்தல், உரம் தயாரித்தல் பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்தல், சுகாதார கல்வி வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நிகழ்ச்சிகளுக்கு Hand bills, Flex, Banners T-Shirt, Cap மற்றும் அவ்வப்போது அறிவிக்கப்படும் அரசின் அறிவிப்பு மற்றும் திட்டத்தின்படி நிகழ்ச்சிகளுக்கு தேவைப்படும் பொருட்கள் மற்றும் நகராட்சியில் தயார் செய்யப்படும் இயற்கை உரம் விற்பனை செய்திட ஏதுவாக Manure Bag ஆகிய பொருட்களை 2023–2024ம் ஆண்டிற்கு கொள்முதல் செய்திடவும் அதற்கான செலவின தொகை ரூ.10.00 லட்சத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.13**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில், கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்பட்டு வந்த கைத்தெளிப்பான் (Hand Sprayer) பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எதிர்வரும் மழைக்காலங்களில் கொசு உற்பத்தி அதிகமாகமல் தடுக்கவும், தற்போது பரவி வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தவும், அவசர அவசியம் கருதி நான்கு எண்ணிக்கை கை தெளிப்பான் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத் தொகை ரூ.2.00லட்சத்தை பொதுநிதியில் இருந்து வழங்கிடவும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.14**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில், DBC பணியாளர்களை கொண்டு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட Hand Bills வழங்க வேண்டியுள்ளது. மேலும் வாரந்தோறும் வீடுகளில் ஆய்வு பணி மேற்கொள்வதற்கும், வீடுகளின் தூய்மையை குறிக்கவும் தேவையான வருடாந்திர Sticker மற்றும் Smily Sticker வீடுகளில் ஒட்டப்பட வேண்டியுள்ளது. மேலும் கொசு உற்பத்தி செய்யும் வீடுகள் மறற்றும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்க ஏதுவாக அபராத விதிப்பு ரசீது தேவைப்படுகின்றது. எனவே 2023–2024ம் ஆண்டிற்கு மேற்கண்ட Hand Bills, Stickers மற்றும் அபராத விதிப்பு ரசீது ஆகியவற்றை கொள்முதல் செய்யவும், அதற்கான செலவின தொகை ரூ.5.00லட்சத்தை பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றத்தன் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.15**

மாங்காடு நகராட்சியில் கணினி இயக்குதல் பணி மற்றும் ஓட்டுநர் பணிக்கு பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.322 நாள்.13.03.2023ல் மாவட்ட ஆட்சித்தலைவர் காஞ்சிபுரம் அவர்களின் 2022–2023ஆம் ஆண்டின் நிர்ணயிக்கப்பட்ட விலைவிகிதப்படி ஊதியம் வழங்கப்பட்டு வந்ததை தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.10074/2021/T2, நாள்.08.07.2023ன்படி 2023–2024ஆம் ஆண்டுக்கு புதியதாக நிர்ணயிக்கப்பட்ட விலைவிதப்படி கீழ்கண்டுள்ள பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த பணியாளர்கள் விவரம் | 2023–2024ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதப்படி வழங்கப்பட்ட வேண்டிய ஊதியம் |
|---|---|---|
| 1 | திருமதி. P.ரோசி<br>கணினி இயக்குபவர் | ரூ.677 x 30 = 20310/– |
| 2 | திரு.N.பார்த்தசாரதி<br>ஓட்டுநர் | ரூ.588 x 30 = 17640/– |
| 3 | திரு.R.தமிழ்ச்செல்வன்<br>ஓட்டுநர் | ரூ.588 x 30 = 17640/– |

**அலுவலக குறிப்பு–** நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2023ம் மாதத்திற்கு புதிய விலைவிகிதப்படி ஊதியம் வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகரமன்ற தலைவர்
மாங்காடு நகராட்சி